# KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF JANAURY FORM 3

Minutes of the Meeting held on 31.01.2019

| Date of council meeting | Deceison number | Subject of the Agemda | Resolution |
|---|---|---|---|
| 31.01.2019 | 1744 | **மன்றப்பொருள்:**1<br>17.12.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் காயல்பட்டணம் நகராட்சிப்பகுதியில் உள்ள கீழலட்சுமிபுரம் மற்றும் பூந்தோட்டம் ஆகிய இரு இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குடிநீர் வசதி செய்திடவும் இரத்தினாபுரி மற்றும் அருணாச்சலபுரம் அகிய இரு இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களில் கழிப்பிடவசதியும் உடனடியாக செய்திட அறிவுறுத்தப்பட்டதின்படி மேற்கண்ட இடங்களில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளை செய்திடவும் அதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>17.12.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி நகராட்சிப்பகுதிகளில் உள்ள கீழ்க்கண்ட அங்கன்வாடி மையங்கள் நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளருடன் ஆய்வு செய்யப்பட்டு தேவையான வசதிகள் செய்திடும் பொருட்டு கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.<br>**மையத்தின் பெயர்: கீழ லட்சுமிபுரம்**<br>**கோரிக்கை: குடிநீர் வசதி செய்தல்**<br>மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது.<br>➢ இந்த மையமானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2009-10ன் கீழ் கட்டப்பட்டுள்ளது.<br>➢ இந்த மையத்தில் சுமார் 15 குழந்தைகள் படிப்பதாக அங்கன்வாடி பணியாளரால் தெரிவிக்கப்பட்டது.<br>➢ இக்கட்டிடத்தில் மின் வசதி நல்ல முறையில் உள்ளது<br>➢ இக்கட்டிடத்தில் நல்ல முறையில் சுகாதாரமான கழிப்பறை வசதி உள்ளது.<br>**நடவடிக்கை**<br>➢ இக்கட்டிடத்திற்கு குடிநீர் வசதி மட்டும் இல்லாத நிலை உள்ளதால் தற்பொழுது நகராட்சியில் நடைபெற்று வரும் குடிநிர் மேம்பாட்டுத்திட்டப்பணிகளில் உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்கிட நகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>**மையத்தின் பெயர்: நாடார் தெரு (பூந்தோட்டம்)** | அனுமதிக்கப்பட்டது |

**கோரிக்கை: குடிநீர் வசதி செய்தல்**

மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

- இந்த மையமானது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2009-10ன் கீழ் கட்டப்பட்டுள்ளது.
- இந்த மையத்தில் சுமார் 20 குழந்தைகள் படிப்பதாக அங்கன்வாடி பணியாளரால் தெரிவிக்கப்பட்டது.
- இக்கட்டிடத்தில் மின் வசதி நல்ல முறையில் உள்ளது
- இக்கட்டிடத்தில் நல்ல முறையில் சுகாதாரமான கழிப்பறை வசதி உள்ளது.

**நடவடிக்கை**

- இக்கட்டிடத்திற்கு குடிநீர் வசதி மட்டும் இல்லாத நிலை உள்ளதால் தற்பொழுது நகராட்சியில் நடைபெற்று வரும் குடிநிர் மேம்பாட்டுத்திட்டப்பணிகளில் உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்கிட நகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மையத்தின் பெயர்: இரத்தினாபுரி**

**கோரிக்கை:கழிவறை வசதி செய்தல்**

மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

- இந்த மையம் அமைந்துள்ள கட்டிடமானது AC சீட் கூரையுடன் மிகவும் பழமையான கட்டிடமாக உள்ளது
- இந்த மையத்தில் சுமார் 20 குழந்தைகள் படிப்பதாக அங்கன்வாடி பணியாளரால் தெரிவிக்கப்பட்டது.
- இக்கட்டிடத்தில் மின் வசதி நல்ல முறையில் உள்ளது
- இக்கட்டிடத்தில் குடிநீர் இணைப்பு இல்லாத நிலையில் அருகிலிருக்கும் வீடுகளிலிருந்து குடிநீர் பெற்று குழந்தைகளுக்கு வழங்குவதாக அங்கன்வாடி பணியாளரால் தெரிவிக்கப்பட்டது.

**நடவடிக்கை**

- இக்கட்டிடத்திற்கு குடிநீர் வசதி மட்டும் இல்லாத நிலை உள்ளதால் தற்பொழுது நகராட்சியில் நடைபெற்று வரும் குடிநிர் மேம்பாட்டுத்திட்டப்பணிகளில் உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்கிட நகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- இந்த மையத்திற்கு கழிப்பறை வசதி இல்லாததால் உடனடியாக கழிவறை தொட்டியுடன் சுகாதாரமான முறையில் கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மையத்தின் பெயர்: அருணாச்சலபுரம்**

**கோரிக்கை:கழிவறை வசதி செய்தல்**

மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

- இந்த மையம் அமைந்துள்ள கட்டிடமானது AC சீட் கூரையுடன் மிகவும் பழமையான கட்டிடமாக உள்ளது.இக்கட்டிடத்தினை ஊராட்சி ஒன்றியம்,திருச்செந்தூர் மூலம் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.1.75 இலட்சம் மதிப்பில் பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மையத்தில் சுமார் 20 குழந்தைகள் படிப்பதாக அங்கன்வாடி பணியாளரால் தெரிவிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | ➢ இக்கட்டிடத்தில் மின் வசதி மற்றும் குடிநீர் வசதி நல்ல முறையில் உள்ளது<br>➢ இந்த மையம் அரசுஉதவி பெறும் தனியார் பள்ளி (தேசிய தொடக்கப்பள்ளி,அருணாச்சலபுரம்) வளாகத்தில் அமைந்துள்ளது.<br>➢ இந்த பள்ளி வளாகத்தில் ஏற்கனவே பள்ளிக்குழந்தைகள் பயன்படுத்தும் கழிவறை ஒன்று உள்ளது<br><br>**<u>நடவடிக்கை</u>**<br>➢ இந்த மையத்திற்கு குழந்தைகளுக்கு தனியாக கழிப்பறை வசதி இல்லாததால் உடனடியாக கழிவறை தொட்டியுடன் சுகாதாரமான முறையில் கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>➢ இப்பள்ளியானது தனியார் நிர்வாகத்தின் கீழ் வருவதால் கழிப்பிடம் கட்டுவதற்கு உரிய அனுமதியினை பள்ளி நிர்வாகத்திடம் பெற்று சமர்ப்பித்திட அங்கன்வாடி பணியாளரிடம் தெரிவிக்கப்பட்டது.<br>➢ பள்ளி தலைமையாசிரியரிடம் ஆலோசனை செய்யப்பட்டதில் கழிப்பிடம் கட்டுவதற்கு உரிய அனுமதியினை பள்ளி நிர்வாகத்திடம் பெற்றுத்தருவதாக தலைமை ஆசிரியரால் தெரிவிக்கப்பட்டது. | |
| | 1745 | **<u>மன்றப்பொருள்:2</u>**<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-19ன் கீழ் ரூ.5.00இலட்சம் மதிப்பீட்டில் 14வது வார்டுக்குட்பட்ட பப்பரப்பள்ளி மயான இடத்திற்கு சுற்றுசுவர் கட்டி பாதுகாப்பு வேலி அமைத்தல் பணிக்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1) திரு.எஸ்.வித்யாசாகர்<br>நடுவக்குறிச்சி<br>சாத்தான்குளம் மதிப்பீடு ரேட்டை விட 0.01% குறைவு<br><br>2) திரு.எஸ்.குமரேசன்<br>12 வணிக வளாகம்<br>காயல்பட்டணம்<br>மதிப்பீடு ரேட்டை விட 0.30% அதிகம்<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.வித்யாசாகர், நடுவக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | திரு.எஸ்.வித்யாசாகர் என்பவரின் ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதை ஏற்று அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1746 | **மன்றப்பொருள்:3**<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-19ன் கீழ் ரூ.5.00இலட்சம் மதிப்பீட்டில் பெரிய நெசவுத்தெரு ஜாபர் சாதிக் தர்கா எதிர்புறம் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணிக்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1) திரு.எஸ்.வித்யாசாகர்<br>நடுவக்குறிச்சி மதிப்பீடு ரேட்டை விட 0.003% குறைவு<br>சாத்தான்குளம்<br><br>2) திரு.எஸ்.குமரேசன்<br>12 வணிக வளாகம் மதிப்பீடு ரேட்டை விட 1.30% அதிகம்<br>காயல்பட்டணம்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.வித்யாசாகர்,நடுவக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | திரு.எஸ்.வித்யாசாகர் என்பவரின் ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால்அன்னாருக்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கப்பட்டது |
| | 1747 | **மன்றப்பொருள்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதாரத்தில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 139 பணியாளர்களை நியமனம் செய்து அவர்களின் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் நக.எண்.38162/P3/2014-12 நாள்.22.01.2015 ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்பொழுது நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் 50 பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.இப்பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் டிசம்பர் 2018ல் முடிவடைந்துவிட்டதால் பொதுசுகாதாரம் - திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் முக்கியத்துவம் கருதி நகர்மன்ற தீர்மானம் எண். நாள். ன்படி அடுத்த மூன்று மாதங்களுக்கு (ஜனவரி,பிப்ரவரி மற்றும் மார்ச் 2019) ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அறிவுரையின்படியும் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் 2017-18ல் கட்டப்பட்டுள்ள இரண்டு எண்ணம் நுண்உரக்குடில் (Micro Compost centre) மற்றும் இரண்டு எண்ணம் Onsite Compost அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு | பணிகள் அனைத்தும் முடிந்த பின்னர் தேவையான பணியாளர்கள் "ரூட் ஷாட்" வழித்தட வரைபடம் வரைந்து உயர் அலுவலர்களின் அனுமதி பெற்று பணியாளர்கனை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும் அது வரை தற்போது உள்ள 50 பணியாளரை பயன்படுத்தி கொள்ளவும் பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிந்தபின் ஒப்பந்தபுள்ளி |

| | | | |
|---|---|---|---|
| | | வந்துள்ளதாலும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாலும் காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளை மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததாலும் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் வழங்கப்பட்டுள்ள செயல்முறை ஆணைகள்படி அனுமதி வழங்கப்பட்ட 139 பணியாளர்களில், ஒவ்வொரு மண்டலத்திற்கும் 30 ஒப்பந்தபணியாளர்கள் வீதம் மூன்று மண்டலத்திலும் 90 பணியாளர்களை பயன்படுத்தி திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br>முதல் மண்டலம் 30 ஒப்பந்தப்பணியாளர்கள் - ரூ.61.00இலட்சம்<br>இரண்டாவது மண்டலம் 30 ஒப்பந்தப்பணியாளர்கள் - ரூ.61.00இலட்சம்<br>மூன்றாவது மண்டலம் 30ஒப்பந்தப்பணியாளர்கள் - ரூ.61.00இலட்சம்<br><br>மேற்கண்டவாறு ஒவ்வொரு மண்டலத்திலும் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்பணியாளர்கள் மூலம் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை அங்கிகரிக்கவும் நகராட்சி வருவாய் நிதியில் பணிகளை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | கோரி பணியாளர்களை பணியமர்த்த அறிவுறுத்தப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை தேர்ந்தெடுக்கவும் அனுமதி. |
| | 1748 | **<u>மன்றப்பொருள்: 5</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தெருவோர வியாபாரிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி தெருவோர வியாபாரிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை 83.00இலட்சம் மதிப்பில் NULM திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1749 | **<u>மன்றப்பொருள்: 6</u>**<br>நகராட்சிகளில் அலுவலக பணியாளர்களின் வருகையை பதிவு செய்ய ஏதுவாக பயோ மெட்ரிக் இயந்திரம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைப்படி காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலக பணியாளர்களின் வருகையை பதிவு செய்திட அலுவலகத்தில் இரண்டு எண்ணம் பயோமெட்ரிக் இயந்திரம் மற்றும் நகராட்சி அம்மா உணவகத்தில் ஒரு எண்ணம் பயோமெட்ரிக் இயந்திரம் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.75000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தற்போது தேவையில்லை மேலும் வருங்காலங்களில் முறைப்படி ஒப்பந்தபுள்ளி கோரி செயல்படுத்தவும். |

<table>
<tr>
<td></td>
<td>1750</td>
<td>
<u>மன்றப்பொருள்:7</u><br>
காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட சாலைப்பணிகள் போக்குவரத்து மேலாண்மைத்திட்டத்தில் (TRAFFIC MANAGEMENT SCHEME) மேற்கொள்ள தேர்வு செயய்ப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>Improvements to Road at Alagapuri street road with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>30.00</td></tr>
<tr><td>2</td><td>Providing paver block platform at C.Customs road from Jamnas palli in Kayalpattanam Municipality</td><td>46.00</td></tr>
<tr><td>3</td><td>Improvements to Road at Karpudaiyarpallivattam street road with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>126.00</td></tr>
<tr><td>4</td><td>Improvements to Road at Mangalavadi street road from Thayeempalli Junction with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>158.00</td></tr>
<tr><td>5</td><td>Improvements to Road at New bus stand to Odakkarai road (via) Poonthottam with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>235.00</td></tr>
<tr><td>6</td><td>Improvements to Road at Thaika street road with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>47.00</td></tr>
<tr><td>7</td><td>Improvements to Road at Vannakudi kadai street road with side paver block platform in Kayalpattanam Municipality</td><td>49.00</td></tr>
<tr><td>8</td><td>Improvements to Road at Koman pudur road with side paver block platform in kayalpattanam municipality</td><td>90.00</td></tr>
<tr><td>9</td><td>Supply and erection of Retro Reflective (Type XI) signboards at Major junctions,Street Junction and bus stand of Kayalpattanam Municipality</td><td>125.00</td></tr>
<tr><td></td><td>Total Estimate Amount</td><td>906.00</td></tr>
</table>
மேற்கண்ட பணிகளை போக்குவரத்து மேலாண்மைத்திட்டத்தில் (TRAFFIC MANAGEMENT SCHEME) நிதி ஒதுக்கீடு பெற்று செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>1751</td>
<td>
<u>மன்றப்பொருள்: 8</u><br>
காயல்பட்டணம் நகராட்சியில் அலுவலகத்திற்கு வரும் இரு சக்கர வாகனங்கள் மற்றும் நகராட்சி வாகனங்களை நிறுத்தவதற்கு போதுமான வாகன நிறுத்துமிடம் இல்லாததால் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி நகராட்சி அலுவலக வளாகத்தில் வாகனங்கள் நிறுத்தமிடம் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது
</td>
<td>மதிப்பீடு தற்போதைய ரேட் படி தயார் செய்ய அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1752 | **மன்றப்பொருள்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி அலுவலக வளாகத்தில் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக புதியதாக அணுகுசாலை அமைத்திட நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளாரால் அறிவுறுத்தப்பட்டதின்படி நகராட்சி அலுவலக வளாகத்தில் புதிய அணுகு சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு செய்து சமர்ப்பித்தபின் பரிசீலக்க முடிவு செய்யப்பட்டது. |
| | 1753 | **மன்றப்பொருள்: 10**<br>காயல்பட்டணம் நகராட்சியில் மிஸ்ட் சேம்பர் அமைத்திட நடவடிக்கை எடுத்திட நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதின்படி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | உத்தேச மதிப்பீடு இல்லாமல் சரியான மதிப்பீடு செய்து வழங்க அனுமதிக்கப்பட்டது. |
| | 1754 | **மன்றப்பொருள்: 11**<br>காயல்பட்டணம் நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் முகப்புகளில் நுழைவு வாயில் அமைத்திட நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளாரால் அறிவுறுத்தப்பட்டதின்படி புதிய பேருந்து நிலையத்தில் நுழைவு வாயில் அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான தற்போது மதிப்பீடு தயார் செய்ய அனுமதிக்கப்பட்டது. |
| | 1755 | **மன்றப்பொருள்: 12**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட எல்.ஆர்.நகர் கிழக்கு தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி எல்.ஆர்.நகர் கிழக்கு தெருவில் (Opp.work shop) சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு தயார் செய்து வழங்க அனுமதிக்கப்பட்டது. |
| | 1756 | **மன்றப்பொருள்: 13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பதிய பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகம் சுமார் ஐந்து ஆண்டுகளாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அம்மா உணவகத்தில் உள்ள சமையல் உபகரணங்கள் அனைத்தும் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை மாற்றிடவும் அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதால் மேற்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு தயார் செய்ய கேட்டு கொள்ளப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 1757 | **மன்றப்பொருள்: 14**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் 12வது வார்டுக்குட்பட்ட மங்களவாடி தெரு சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மங்களவாடி தெரு தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு தயார் செய்து வழங்கவும். |
| | 1758 | **மன்றப்பொருள்: 15**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் 12வது வார்டுக்குட்பட்ட செல்வவிநாயகபுரம் சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி செல்வ விநாயகபுரம் தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | மதிப்பீடு சரியான வகையில் தயார் செய்யவும். |
| | 1759 | **மன்றப்பொருள்: 16**<br>காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களை மேம்பாடு செய்து அதனை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் பல்நோக்கு மையங்களாக மாற்றிட தேவையான நடவடிக்கைகளை எடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதால் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி நகராட்சி கழிப்பிடங்களை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் பல்நோக்கு மையங்களாக மாற்றிடதயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | உத்தேச மதிப்பீடு இல்லாமல் சரியான மதிப்பீடு தயார் செய்யவும். |
| | 1760 | **மன்றப்பொருள்: 17**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் 12வது வார்டுக்குட்பட்ட மன்னராஜா கோவில் தெரு சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மன்னராஜா கோவில் தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு வழங்க கேட்டு கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 1761 | **<u>மன்றப்பொருள்: 18</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் 12வது வார்டுக்குட்பட்ட பூந்தோட்டம் தெற்கு தெரு சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி பூந்தோட்டம் தெற்கு தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு வழங்க கேட்டு கொள்ளப்பட்டது. |
| | 1762 | **<u>மன்றப்பொருள்: 19</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் 2017-18ல் ரூ.50.92இலட்சம் மதிப்பில் நகராட்சி பகுதி சிவன் கோவில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான நில அளவை எண்.392/5ல் Micro compost centre கட்டும்பணி முடிக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டுக்கு வரும் நிலையில் உள்ளது.மேலும் இதனை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுவதற்கு போதுமான நிதி திட்ட மதிப்பீட்டில் இல்லாததால் நகராட்சி வருவாய் நிதியில் MCC– ஐ சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டிட நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதால் பாதுகாப்பு சுவர் கட்டிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.80இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | மதிப்பீடு சரியான முறையில் தயார் செய்து வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. |
| | 1763 | **<u>மன்றப்பொருள்: 20</u>**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் 1வது வார்டுக்குட்பட்ட அருணாச்சலபுரம் காலணி தெரு சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி 1வது வார்டுக்குட்பட்ட அருணாச்சலபுரம் காலணி தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | உத்தேச மதிப்பீடு இல்லாமல் சரியான மதிப்பீடு வழங்கவும். |
| | 1764 | **<u>மன்றப்பொருள்: 21</u>**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட எல்.ஆர்.நகர் தெற்கு தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி எல்.ஆர்.நகர் தெற்கு தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | உத்தேச மதிப்பீடு இல்லாமல் சரியான மதிப்பீடு வழங்க கேட்டு கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 1765 | **மன்றப்பொருள்: 22**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட எல்.ஆர்.நகர் வடக்கு தெரு சாலை மண் சாலையாக இருப்பதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன்கருதி நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி எல்.ஆர்.நகர் வடக்கு தெருவில் சிமெண்ட் பேவர் பிளாக் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு தயார் செய்து வழங்க பொறியாளரை கேட்டு கொள்ளப்பட்டது. |
| | 1766 | **மன்றப்பொருள் 23**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 7வது வார்டுக்குட்பட்ட தீவுத்தெரு சாலையானது மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகுந்த சிரமம் ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையை மேம்பாடு செய்திட நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட தீவுத்தெரு சாலையை மேம்பாடு செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சரியான மதிப்பீடு வழங்க கேட்டு கொள்ளப்பட்டது. |
| | 1767 | **மன்றப்பொருள்:24**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட 14-வது வார்டு பாஸ்நகரில் பொதுமக்கள் கோரிக்கைப்படி கூடுதல் தெருவிளக்குகள் 4 எண்ணங்கள் அமைப்பதற்கும், அதற்கான மின்வாரிய கேட்பு ரூ.12848/- மட்டும் மின்வாரியத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து நிர்வாக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |
| | 1768 | **மன்றப்பொருள்:25**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட K.M.T.மருத்துவமனை எதிர்புறம் பொதுமக்கள் கோரிக்கைப்படி கூடுதல் தெருவிளக்குகள் 3 எண்ணங்கள் அமைப்பதற்கும், அதற்கான மின்வாரிய கேட்பு ரூ.10789/- மட்டும் மின்வாரியத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து நிர்வாக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வழங்கியதற்கும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>1769</td><td><u>மன்றப்பொருள்:26</u><br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம், குடிநீர் வாகனம் (ம) அலுவலக ஈப்பு வாகனம் ஆகியவைகளுக்கு சில்லறை செலவு மேற்கொண்ட வகைக்கு கீழ்க்கண்டவாறு ஓட்டுநரால் செலவு செய்யப்பட்ட பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.<br><table><tr><td>வ.எண்</td><td>வாகனம் எண்</td><td>தொகை (ரூ)</td></tr><tr><td>1</td><td>TN69S0146</td><td>4590/-</td></tr><tr><td>2</td><td>TN69U6922</td><td>3200/-</td></tr><tr><td>3</td><td>TN69AT2821</td><td>910/-</td></tr><tr><td>4</td><td>TN69A70603</td><td>1740/-</td></tr><tr><td>5</td><td>TN92A6369</td><td>758/-</td></tr><tr><td>6</td><td>TN69 S0761</td><td>3700/-</td></tr><tr><td>7</td><td>TN69AR6018</td><td>2850/-</td></tr><tr><td>8</td><td>TN69U9148</td><td>480/-</td></tr><tr><td colspan="2">மொத்தம்</td><td>18228/-</td></tr></table><br>மேற்படி வாகனத்திற்கு ஓட்டுநரால் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.18228/- மட்டும் திரு.வெ.ராதாகிருஷ்ணன், ஓட்டுநருக்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>1770</td><td><u>மன்றப்பொருள்:27</u><br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் எண்:TN69S0146 ___க்கு மராமத்து பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><table><tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை (ரூ)</td></tr><tr><td>1</td><td>ஜெய் ஆட்டோ கேரேஜ்,தூத்துக்குடி</td><td>195207/-(With Gst)</td></tr><tr><td>2</td><td>அய்யனார் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் ஒர்க்ஸ்,தூத்துக்குடி</td><td>191951/-(With Gst)</td></tr></table></td><td>பொதுசுகாதார அவசரத்தை முன்னிட்டு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:1 ஐ விட வரிசை எண்:2 அய்யனார் ஆட்டோ மொபைல் என்ஜினியரிங் ஒர்க்ஸ், தூத்துக்குடி நிறுவனத்திற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | |
| | 1771 | **மன்றப்பொருள்:28**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் Micro Compost Center 2 எண்ணம் மற்றும் Bio Gas Plant மற்றும் Onsite Compost 2 எண்ணம் தற்சமயம் கட்டுமான பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டுக்கு கொண்டுவர இருப்பதால் தற்போது உள்ள துப்புரவு பணியாளர்கள் மூலம் முழுமையாக செய்ய இயலாத காரணத்தினால் மேற்படி பணிக்கு கூடுதலாக ஆட்கள் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் எண்:1345/16, நாள்:30.12.2016-ன்படி கூடுதலாக ஆட்கள் ஒப்பந்தம் மூலம் நியமனம் செய்ய நடவடிக்கையில் உள்ளது. தற்சமயம் 50 துப்புரவு பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் K.R.கன்ஸ்ட்ரக்சன் பணி ஒப்பந்த காலம் வரும் 31.01.2019-ல் முடிவடைவதால் மேற்படி நிறுவனத்திற்கு பொறியியல் பிரிவு மூலம் புதிய ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படும் வரை மேற்படி K.R.கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | மே 2019 வரை தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் உள்ளதால் அதன் பின்னர் ஒப்பந்த புள்ளி கோரி பணியாளர்களை பணிக்கு கோர அனுமதிககப்பட்டது. |
| | 1772 | **மன்றப்பொருள்:29**<br>இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் வருடாந்திர பராமரிப்பு காலம் 22.02.2019-ல் முடிவடைந்து விட்டது. அடுத்து ஓராண்டு காலத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி செய்ய உத்தேச செலவினம் ரூ.60000/- ஆகும். மேலும் மேற்படி பணிகள் மேற்கோள்ள நிர்வாக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><br>\| \| நிறுவனத்தின் பெயர் \| விலைப்புள்ளி ஒரு வருடத்திற்கான பராமரிப்பு தொகை \|<br>\| 1 \| ரூபா கம்ப்யூட்டர் பிரைவேட் லிட்,பாளையம்கோட்டை \| 65100/-(Without Gst) \|<br>\| 2 \| பிரிமியர் சிஸ்டம்ஸ்,திருநெல்வேலி \| 70300/-(Without Gst) \| | பாராளுமன்ற நன்னடத்தை விதிமுறைகள் முடிவுற்றபின் டெண்டர் கோரி முடிவு செய்ய அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td>3</td><td>பிகாஸஸ் சர்வீசஸ்,சேரன்மகாதேவி</td><td>58350/-(Without Gst)</td></tr></table>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1 (ம) 2–ஐ விட வரிசை எண்:3 பிகாஸஸ் சர்வீசஸ், சேரன்மகாதேவி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.</td><td></td></tr>
<tr><td></td><td>1773</td><td><u>மன்றப்பொருள்:30</u><br>காயல்பட்டணம் நகராட்சியில் சொத்துவரி சீராய்வு 01.04.2018 முதல் மேற்கொண்ட வகைக்குஇந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்:1631, நாள்:31.07.2018-ன்படி ஏற்கனவே சொத்துவரி சீராய்வுக்கான செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 15488 சொத்துவரிவிதிப்பு எண்கள் கணினியில் விபரங்கள் பதிவேற்றம் செய்வதற்கு மாடர்ன் கம்ப்யூட்டர், காயல்பட்டணம் நிறுவனத்திற்கு நிர்வாக அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதையும், அதற்கான செலவு தொகை ஒரு பதிவிற்கு ரூ.1/- வீதம் ரூ.15488/- இந்நகர்மன்றத் தீர்மானம் எண்:1631, நாள்:31.07.2018-ன்படி இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>1774</td><td><u>மன்றப்பொருள்:31</u><br>காயல்பட்டணம் நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் மேல் பகுதி வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் வைத்து பல்வேறு விழிப்புணர்வு கூட்டங்கள், பயிற்சி வகுப்புகள் (ம) கலந்தாய்வு கூட்டம் போன்றவை நடத்தப்பட்டுவருகின்றது. மேற்படி கூட்டங்களுக்கு தேவையான சேர்கள் வாடகைக்கு வாங்கி தான் உபயோகிக்கப்பட்டுவருகின்றது. எனவே கூட்டம் நடத்த தேவையான சேர்கள் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ்ஸ், திருச்சிராப்பள்ளி என்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து 100 சேர்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.140000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 1775 | **மன்றப்பொருள்:32**<br>காயல்பட்டணம் நகராட்சி சார்பில் தூய்மை இந்தியா திட்டம் மூலம் பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகின்றது. இதன் ஒரு பகுதியாக நகராட்சி பகுதியில் உள்ள சுவர்களில் வண்ணம் தீட்டுதல் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டது. மேலும் தற்சமயம் நெகிழி இல்லாத காயல் என்ற அடிப்படையிலும், மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்களின் அறிவுறுத்தலின்படி நகரில் பல இடங்களில் துணிப்பை பற்றிய விழிப்புணா்வு படங்கள், ஓவியம் தீட்ட சாகுபுரம் சிட்டி யூனியன் வங்கி மூலம் வரப்பெற்ற ரூ.100000/- சி.எஸ்.ஆர் நிதி மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது. |
| | 1776 | **மன்றப்பொருள்:33**<br>காயல்பட்டணம் நகராட்சியின் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளது. கடந்த மாதம் தூய நிர்வாகம் (செல் பிரிவு) அலுவலர்கள் கடந்த மாதம் கள ஆய்வின் போது நகராட்சியின் வாயில் முன்பு தீயணைப்பு கருவிகள் (ம) ஆணையாளர் பெயர் பலகை போன்றவைகளை நிவர்த்தி செய்ய வலியுறுத்தப்பட்டதன் பேரில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து நிலை பணியாளர்களின் அறைகளுக்கும் (ம) மேல்மாடியில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கு, நகர்மன்ற தலைவர் அறை, நகர்மன்ற உறுப்பினர்கள் அறை என 14 எண்ணம் குளிர்சாதன அறையிலும் வெளிப்புறப்பகுதியில் 4 எண்ணம் தீயணைப்பு தடுப்பு கருவி பொருத்தவும் அலுவலக வாயில் முன்பு தீயணைப்பு தடுப்பு உபகரணங்கள் அமைக்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.300000/- இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது. |
| | 1777 | **மன்றப்பொருள்:34**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சிசட்டம் 1920 விதி எண்.15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளும் அதற்கு வழங்கப்பட்ட செலவினப்பதிவேடுகளும் மன்றத்தின் பார்வைக்கு. | அனுமதிக்கப்பட்டது. |
| | 1778 | **மன்றப்பொருள்:35**<br>காயல்பட்டணம் நகராட்சியில் வருவாய்பிரிவு,பொது சுகாதாரபிரிவு,நகர் ஊரமைப்புபிரிவு மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகளின் தொடர்பான புகார்கள் மற்றும் விபரங்களை மென்பொருள் மூலம் தெரிவித்து அதற்குரிய பதில்களை விரைந்து பெற்றிட மாவட்ட ஆட்சியர் மூலம் செயல்படுத்தப்பட்ட call for collector போன்று இந்நகராட்சியில் உருவாக்கி அதன் மூலம் நடவடிக்கை எடுத்திட மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம். மற்றும் ஆணையாளர் (பொ),காயலபட்டணம் நகராட்சி அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்டவாறு பொதுமக்களின் தேவைக்காக இந்நகராட்சியில் HALLO KAYAL என்ற மென்பொருள் உடனடியாக பொருத்திட முறையான விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, மேற்கண்டவாறு பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கோரியுள்ள M/s YTR TECHNOLOGIES PVT.LTD. Visakhapatnam என்ற நிறுவனத்தின் | மாவட்ட ஆட்சியர், மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி அவர்கள் அறிவுரையின்படி செயல்படுத்த, அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | விலைப்புள்ளியை இந்நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு அங்கீகரித்ததற்கும், வேலை உத்திரவு வழங்கியதற்கும் இம்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

தனி அலுவலர்/ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி